Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 37—No. 11

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 37 | குரோதி கார்த்திகை 1964 நவம்பர் | இதழ் 11

திரு. ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளை அவர்கள் "நூற்றுண்டு விழா நினைவு மலர்"

உள்ளுறை பக்கம்

ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளை ... 319
சைவ சித்தாந்த ஆராய்ச்சி வல்லுநர் ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளை அவர்களின் வரலாறு ... 326
இரண்டு மணிகள் ... 338
கடவுளின் சொரூபம் ... 343

பத்திராசிரியர்: மு. அருணசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா 4

318

சமாஜச் செய்திகள்

29—11—64 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக்கூட்டம் அலுவலகத்தில் நிகழும். உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள்.

மாநாடு:—

நம் சைவ சித்தாந்த மகா சமாஜ 59 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் மாநாடும் கோவைமாவட்டத்தில் ஈரோட்டில் 25, 26, 27—12—64 ஆம் நாட்களில் நிகழும். சைவர் மாநாட்டுக்கு பழநி திரு. க. அரங்கசாமி முதலியார் அவர்களும் சைவ இளைஞர் மாநாட்டுக்கு திருச்சி திரு. ஜி. வரதராசப் பிள்ளை அவர்களும் தலைமை வகித்து மாநாடுகளை நடத்தித்தருவார்கள்.

கோவை மாவட்டத்தில் 1938 லும், 1947 லும் கோவையிலும், 1953ல் ஈரோட்டிலும் ஆக மூன்று சமாஜ மாநாடுகள் நிகழ்ந்திருக்கின்றன. பத்தாண்டுகளுக்குப் பின் அம்மாவட்டத்தில் மாநாடு நிகழவிருக்கின்றது. அம்மாவட்ட அன்பர்கள் அம்மாநாடு சிறப்புற நிகழ ஆவன செய்யக் கேட்டுக் கொள்கின்றோம். நிகழ்ச்சி நிரல் அடுத்தமாத இதழில் வெளிவரும்.

சமாஜத் தேர்வு

நம் சமாஜம் நடத்தும் சைவப் புலவர், இளஞ்சைவப் புலவர் தேர்வுகளில் முதல் வகுப்பில் வெற்றி பெறுபவர்களுக்கு நம் சமாஜ அன்பர் ஒருவர் கொடுத்த மூலநிதியாகிய ஆயிரம் ரூபாய்களிலிருந்து வரும் வட்டியாம் ரூ 50 (ஐம்பதினையும்) பரிசாகக் கொடுக்கப் பெறும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆகவே சமாஜ உறுப்பினர்கள் ஆங்காங்குத்தக்க இளைஞர்களை ஊக்கப்படுத்தி இத்தேர்வில் கலந்து இப்பரிசினைப் பெறும் வாய்ப்பினை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டுகின்றோம். 28—11—64 29—11—64 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நம் சமாஜம் நடத்தும் சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் தேர்வுகள்

Reg. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 37 | குரோதி கார்த்திகை 1964 நவம்பர் | இதழ் 11

4 NOV 1964

ஜே. எம். நல்லசாமிப் பிள்ளை

—(பத்திரிகாசிரியர்)—

இம்மாதம் சைவப் பெரியார் ஜே. எம். நல்லசாமிப் பிள்ளையவர்கள் பிறந்து நூறு ஆண்டுகள் முடிகின்ற காலம். இவர் மும்முறை சைவ சித்தாந்த சமாஜக் கூட்டத்தில் தலைமை வகித்திருக்கிறார். 1911ல் சமாஜ ஆண்டு விழா சென்னையில் நடந்தபோது திரு. வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள் தாம் முதன் முதல் சமாஜத்தில் இவர் தலைமையில் "சைவன் எவன்?" என்பது பற்றிப் பேசியதாக எழுதி யிருக்கிறார். பல ஆண்டுகள் உதவித் தலைவரா யிருந்திருக்கிறார். சைவ சமயத்துக்கென்றே தம் மூச்சுள்ள மட்டும் உழைத்தார். உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணம் செய்தார் என்றால் பொருந்தும். இவர் பிறந்த நூற்றாண்டு நிறைவு தினத்தை சமாஜம் கொண்டாடும் வகையில் இம்மாதச் சித்தாந்த இதழ் இவருடைய நினைவு மலராக வெளியிட வேண்டுமென்ற சமாஜத் தீர்மானத்திற்கிணங்க இவ்விதழ் இவ்விதமே வெளிவருகின்றது.

பிள்ளையவர்கள் திரிசிராப்பள்ளியில் மாணிக்கம் பிள்ளை–செல்லத்தம்மையார் புதல்வராக 24—11—1864ல் பிறந்தார். இளமையில் தமிழ்க் கல்வியும் தேவாரமும் முறையாகப் பயின்றார். ஆங்கிலக் கல்வியும் கற்றுத் தத்

துவ சாஸ்திரத்தில் பட்டம் பெற்று, பின் சட்டக் கல்வி கற்று வழக்கறிஞராகி, 1893 முதல் இருபது ஆண்டுகள் ஜில்லா முனிசிபாக உத்தியோகம் பார்த்தார். தம் ஐம்பத்தாறும் வயதில் 11–8–1920 ல் காலமானுர்.

இவர் தமது 30-வது வயதில் (1894) சிவஞானபோதம் பயிலத் தொடங்கி அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1895 ல் வெளியிட்டார். இவருக்கு முன், ஹொய்சிங்டன் என்ற பாதிரியார், சிவஞான போதத்தை மொழி பெயர்த்து வெளியிட்டிருந்தார். கிரால் என்ற பாதிரியார் சிவஞான சித்தியாரை மொழி பெயரத்து வெளியிட்டிருந்தார் எனினும், இம்மொழி பெயர்ப்புக்கள் அதிகப் பிரசாரம் பெறவில்லை. பிள்ளையவர்களுடைய மொழி பெயர்ப்பு வெளியான பிறகே இந்நூலின் அருமை ஆங்கிலம் படித்தவர்களிடையேயும் ஆங்கிலேயர்களிடையேயும் தெரிய வரலாயிற்று. இதனுல் அவருக்குப் புகழ் ஏற்பட்டது; சைவ சித்தாந்த நெறிக்கே இவர் ஒரு சிறந்த காவலர் என்ற உறுதியும் மக்களிடையே ஏற்படலாயிற்று.

இவருடைய திருவருட்பயன் மொழிபெயர்ப்பு 1897 ல் வெளியாயிற்று. அதற்குமுன் இச்சிறுசாஸ்திரத்தை டாக்டர் போப்பும், கொப்பன் என்ற பாதிரியாரும் தனித் தனியே ஆங்கிலப்படுத்தி வெளியிடுவதற்குச் சித்தம் செய்து வைத்திருந்தார்கள்; ஆயினும் அவர்கள் இவருடைய மொழி பெயர்ப்பின் சிறப்பையும் இவரிடம் தாங்கள் பூண்டிருந்த பெருமதிப்பையும் கருதி, அப்போது தங்கள் மொழி பெயர்ப்பை வெளியிடவில்லை. பின்னர் 1900 இல் போப் தம்முடைய திருவாசக மொழிபெயர்ப்பை அதன் குறிப்புகளோடு சேர்த்து வெளியிட்டார்.

1897–இலேயே இவர் சிறப்பாகச் சைவ சித்தாந்தத்துக்குப் பாடுபடுவதற்கென்றே "சித்தாந்த தீபிகை" என்ற பெயரில் ஓர் ஆங்கிலப் பத்திரிகையைத் தொடங்கினுர். இதற்குத் தாமே ஆசிரியராயிருந்து, முழுமையும் தம் பொறுப்பிலும் செலவிலும் இதை நடத்தி வந்தார். இப்பத்திரிகை 1914 வரையில் நடைபெற்றுப் பிறகு நின்றுபோயிற்று. இதனுள் பிள்ளையவர்களின் மெய்கண்ட

சாத்திர மொழி பெயர்ப்பான உண்மை விளக்கம், சிவ ஞான சித்தியார், சிவப்பிரகாசம், இருபா இருபது, வினு வெண்பா, கொடிக்கவி, உண்மை நெறி விளக்கம் என்பன வெளிவந்தன. சித்தாந்த சாத்திரங்கள் யாவையும் தம் ஆயுளில் மொழி பெயர்த்து வெளியிட்டு விடுவது என்று இவர் உறுதி பூண்டிருந்தார். காலன் குறுக்கிட்டமையால் இக்கருத்து நிறைவேறவில்லை என்று தெரிகிறது. இன்னும் பத்து, இருபது ஆண்டுகள் இவர் உயிரோடிருந்திருக்கும் பட்சத்தில் நிச்சயமாக எவ்வளவோ செய்திருப்பார். தாயுமானவர் கூறியபடி "மௌனமோலி அயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில் அமர்ந்தது வைதீக சைவம்" என்ற நிலை உதித்திருக்கும்.

சைவ சமயம் உலகமெங்கும் பயில வேண்டும் என்பதே இவருடைய ஆசை. அதுபற்றியே ஆங்கிலத்தில்எழுதினர். இவருடைய உதவியால் நீலகண்ட சிவச்சாரியாருடைய பிரம்ம சூத்திர பாஷ்ய மொழிபெயர்ப்பு பத்திரிகையில் வெளிவந்து 1901 இல் பூர்த்தி ஆயிற்று. அழுத்தமான சைவப் பற்றுக்கொண்ட பெரும் பண்டிதர்களான டாக்டர் ரமண சாஸ்திரிகள், அரியநாயகிபுரம் அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள் போன்ருேர் பல நூல்களை மொழி பெயர்த்தும் சைவ சித்தாந்த பரமான கட்டுரைகள் எழுதியும் தீபிகையை வளர்த்து வந்தார்கள். இதன் தொண்டு காரணமாக இவரிடமும் சைவ சித்தாந்தத்திடமும் பற்றுக் கொண்ட ஆங்கிலேய அறிஞர் மிகப் பலர். பிரேஸர், பார்னெட் போன்ற பேராசிரியர்களும் போப், கௌடி, ஷொமெரஸ், குட்வில், கொப்பன் போன்ற பாதிரிமாரும் சைவ சித்தாந்த சமயக் கொள்கைகளையும் இலக்கியங்களையும் ஆராய்ந்து வந்தார்கள்.

இவர் சைவ சித்தாந்தத்தை ஆராய்ந்ததோடு, அதற்கு அரண் செய்யும் வகையில் சமயங்களையும் பயின்றிருந்தார். சித்தியார் பரபக்கம் சுபக்கம் இரண்டையும் மொழி பெயர்த்திருந்தார். ஆங்கிலப் பெயர்ப்புக்கு இவர் எழுதிய முன்னுரை ராயல் அளவில் 40 பக்கம் கொண்டது. இது இவருடைய கல்வியின் ஆழத்துக்கும் ஆராய்ச்சித் திறனுக்கும் சிறந்த எடுத்துக் காட்டு. அக்காலக் கொள்கைப்படி

தமிழ்ச் சிவஞானபோதம் வடமொழி ரௌரவாகமத்தின் பகுதியின் மொழி பெயர்ப்பு என்று சிலர் நம்பினர். இதை ஆராய இவர் முற்படவில்லை. சைவ சித்தாந்தத்தை ஆக மாந்தம் என்று இவர் வழங்குவார்.

"வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்" என்பது உமாபதி சிவம் கூற்று. இதுவே ஆகமாந்தம் என்பர் சிலர். எனவே, ஆகமத்துள் சிவஞான போதம் கூறப்படுதல் சிறப்பு என்று கருதினர். அக்காலம் சமய நூலறிவும், தமிழ் நூலறிவும், கால வரையறையும் விளக்கம் பெருத காலம் என்பதை நாம் மறக்கக்கூடாது. அப்படிப்பட்ட காலத்தில் சிலர் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த பற்றும் தெளிவும் வைராக்கியமும், இன்றும் நமக்கு வியப்பூட்டுவன. நீலகண்ட சிவாச்சாரியர் சங்கரருக்கு முற்பட்டவர். இவர் எழுதிய பிரம்ம சூத்திர பாஷ்யம் சைவ சித்தாந்தத்துக்குரிய ஆதார நூல்களில் ஒன்று என்பது இவர் கருத்து. வடமொழி நூல்களை நன்கு பயின்று வேண்டும்போதெல்லாம், உபநிடதம் முதலியவற்றிலிருந்து மிகுதியான மேற்கோள் எடுத்துக் காட்டுவார்.

மேற்கோள் தமிழாயினும் வட மொழியாயினும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறுவார். இவர் வடமொழியைத் தூஷிப்பவர் அல்லர். சைவம் வட மொழியின் துணையும் கொண்டே இயங்க வேண்டும் என்பது இவர் கருத்து. வேதத்தின் அந்தமாகிய உபநிடதமும் நமக்கு உடன்பாடு; அதுவும் நம் ஆதார நூல்களுள் ஒன்று என்பது இவர் கொள்கை. சித்தாந்த தீபிகையில் இவர் எழுதிய கட்டுரைகளில் சிலவற்றைத் தொகுத்து "சைவ சித்தாந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள்" என்ற பெயரில் தனிநூலாக ராயல் 360 பக்கங்களில் 1911-இல் வெளியிட்டார். இதற்கு ரமண சாஸ்திரிகள் சிறப்பான ஒரு சிறுமுகவுரை எழுதியிருக்கிறுர். இவற்றுள், கடவுளின் சொரூபம், கடவுளும் உலகும், திருக்குறள் வீட்டின்பால், சரியாதி நான்கு மார்க்கங்கள், சுவேதாசுவதர உபநிடதம், தத்துவங்களும் அவற்றுக்கு அப்பாலும், சைவ சித்தாந்த பரமான அத்வைதம் என்பன சிறப்பான சில கட்டுரைகள். இவற்றுள் சில அக்காலத்தில் தமிழில் மொழி

பெயர்க்கப்பட்டு, சமாஜ வெளியீடாகிய சித்தாந்தம் பத்திரிகையிலும் வெளிவந்தன. (முதல் கட்டுரையாகிய கடவுளின் சொரூபம் என்பது பிற்காலத்தில் மறைமலையடிகள் என்ற பெயரோடு வழங்கிய சுவாமி வேதாசலத்தால் தமிழாக்கப்பட்டு 1912 ஜனவரி மாதம் முதல் சித்தாந்தம் இதழில் வெளியாயிற்று. அது இவ்விதழில் வேறோரிடத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

சைவ சித்தாந்த இலக்கிய வரலாற்றிலும், கருத்து வளர்ச்சியிலும், இவருடைய ஆராய்ச்சிகள் புதியவை. பிறர் யாவரும் கிளிப்பிள்ளைபோல் சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லி வர, இவர் ஒருவரே புதிதாகச் சிந்தித்துப் பிற சமயங்களோடு தொடர்புபடுத்தி, மூல ஆதாரங்களைத் தேடி, முந்தையோர் கருத்துக்கு முரணில்லாமல் அரண் செய்யும் வகையில் தம் சமயக் கோட்பாட்டை விளக்கி யுரைத்தார். வேதம் பசு, அதன்பால் மெய்யாகமம், நால்வர் ஓதும் தமிழ் அதன் உள்ளூறு நெய், நெய்யின் உறுசுவை சிவஞான போதம் என்று பழம் பாடல் தெரிவிக்கின்றது. ஒருவகையில் இது சைவ சித்தாந்தக் கருத்து வளர்ச்சியைக் காட்டும். உமாபதியார் காலத்துக்குப்பின் 14 ஆம் நூற்றுண்டில் சிற்றம்பல நாடிகளும் 15–ஆம் நூற்றுண்டில் அவர் மாணுக்கர் பலரும், 16–இல் மறைஞான தேசிகர், சிவாக்கிரயோகி முதலிய பெரியோரும் தம் நூல்களாலும், உரைகளாலும் சைவ சித்தாந்தக் கருத்துக்களை வளர்த்தார்கள். பின்னும் 18–ஆம் நூற்றுண்டில், சிவஞான சுவாமிகள் சிவாக்கிர பாஷ்யத்தை நன்கு பயின்று சிவஞான பாஷ்யம் எழுதி சித்தாந்தத்தை மேலும் வளர்த்தார்: புதிய உருவமும், புதிய உயிரும் கொடுத்தார். சமயக் கொள்கைகள் இவற்றுல் உறுதியும் விளக்கமும் பெற்றன.

இக்காலத்தின் பின், பிற மக்களின் தொடர்பு தமிழ் நாட்டில் ஏற்பட்டது. பிற சமய, மொழி மோதல்களைத் தாங்கும் ஆற்றல் உடையதாகச் செய்தவர் நல்லசாமிப் பிள்ளையவர்கள். பாதிரிமார் சைவ சமயத்தைப் பயின்ற போது அதில்கண்ட புதுமை ஓரளவு அவர்களை ஈர்த்த போதிலும், இவருடைய நூல்களாலேயே அவர்களுக்கும்

தெளிவு பிறந்தது. ஆண்டவன், உயிர்களாகிய நாம், ஏனைய பகுதிகளாகிய உலகம்—ஆகியவற்றின் தன்மை இன்னது, தொடர்பு இன்னது, முடிவு இன்னது என்று சாத்திர விரோதமில்லாமல், பிறரோடு அவசியமின்றி மோதுதல் இல்லாமல், நம் சமயக் கொள்கையை வட மொழி தென்மொழி ஆதாரங்களோடு வரையறைசெய்து நிறுவியவர் இவரே. இந்த அளவு தெளிவு செய்தவர்கள் பிறர் யாருமிலர். தூஷணமே இன்றித் தம்மதம் நிறுவிய பெருமை இவருடையது. ஆங்கிலம் கற்ற வழக்கறிஞரா யும் ஒரு பாற்கோடாத நீதிபதியாயும் இவர் விளங்கிய மையால், இவர் சொல்லுக்குத் திட்டமான உருவம் உண் டாகியது. கேட்போர் கொள்ளத் தக்கனவற்றை மறுத்த லுக் கிடமிலாமல் திரட்டிக் கூறும் ஆற்றல் பிறந்தது.

இவருடைய கருத்து, சைவ சமயம் உலகம் முழுமை யும் கொள்ளக் கூடிய தனிச் சமயம் என்பது. ஆகவே இவர் தம் கருத்துக்களை அகில உலகமும் அறியக் கூடிய ஆங்கில மொழியில் எழுதினர். அதிலேயே பத்தி ரிகையும் நடத்தினர். "மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை. திறமான புலமை யெனில் பிறநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண் டும்" என்ற பாரதியார் பாட்டை இவர் கேட்டதில்லை. ஆனல் பாரதியாருக்கு முன்னமே இவர் இக்கருத்தைச் செயலில் செய்து காட்டினர்.

இவருடைய கட்டுரைகளைப் படிக்குந் தோறும் சைவ சமயம் எப்படி உலக சமயமாகும் என்று காட்டுவதில் இவருக்குள்ள பேரார்வம் யாருடைய நெஞ்சையும் உருக் காமல் இராது. யாரையும் இவர் கண்டனம் செய்ததில்லை. ஆனல் "மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால்— பொய் போலும்மே பொய் போலும்மே" என்ற மொழிப் படி, சைவர்கள் தங்கள் சமயச் சிறப்பைத் தாங்கள் உணராமலும் பிறருக்கு உணர்த்த அறியாமலும் இருக்கி ருர்களே என்ற வருத்தம் இவர் எழுத்தெங்கும் தொனிக் கக் காண்கிறோம். தாம் ஆங்கிலத்தில் எழுதியதன் கார ணத்தையும் இவர் கூறுகிருர். தென்னிந்திய மக்கள் அனைவரும் தம்மை ஹிந்துக்கள் என்று கூறிக்கொண்டு

சங்கரரையும் வணங்கிக் கொண்டிருந்த காரணத்தால், மேலைநாட்டு ஆராய்ச்சியாளர், இவர்களையும் சங்கர அத்வைதம் கடைப்பிடிக்கும் வேதாந்திகள் என்று கருதி, தனியே இவர்களுக்கு ஒரு மதம் உண்டென்று கொண்டதில்லை. உண்மையில் இன்னது என்று அவர்களுக்கும் சைவர்களுக்கும் உணர்த்தவே இவர் அரும்பாடு பட்டார். இவர் ஒருவரால்தான் சைவ சித்தாந்தத்துக்கு மீண்டும் உலகச் சமய அரங்கில் அங்கீகாரம் ஏற்பட்டதென்றால் பொருந்தும்.

பிள்ளையவர்கள் சைவப் பொலிவுடையவர். எந்நேரமும் திருநீறும் சந்தனப்பொட்டும் அணிந்திருப்பார். சைவ ஒழுக்கமுடையவர்.

இக்காலத்தில் அனேகர் தமிழாராய்ச்சியும் சமய ஆராய்ச்சியுமே தம் வாழ்க்கைத் தொழிலாக—உத்தியோகமாகக் கொண்டிருக்கிறார். இருந்தும் அவர்கள் சாதித்தது மிகவும் குறைவு. அவர்கள் வளர்ந்திருக்கிறார்கள் என்பது உண்மை. அவர்களால் தமிழோ, சைவமோ வளர்ந்ததோ என்றால் இல்லை என்றுதான் வருத்தத்தோடு குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஆனால் இவரோ வாழ்க்கையில் வேறு தொழிலினர்: முதலில் வழக்கறிஞர்; பின்னர் நீதிபதித் தொழில். இத்தொழிலுக்கிடையே கிடைத்த ஓய்வு நேரத்தில்தான் இவ்வளவு சமயப் பணி செய்தார். இதை எண்ணிப் பார்க்கும்போது இவரது சாதனை மிகவும் ஆச்சரியகரமானதென்றே நாம் எண்ணவேண்டும். வருங்காலத்தில், இன்னும் சில நூறு ஆண்டுகளேனும், இவருடைய ஆராய்ச்சிப்பணி சைவமக்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்து மேலும் மேலும் ஆக்கப் பணியில் ஊக்கந் தந்து கொண்டிருக்கும்.

நல்லசாமிப் பிள்ளையவர்கள் நாமம் வாழ்வதாக!

சைவ சித்தாந்த ஆராய்ச்சி வல்லுநர்

ஜெ.எம். நல்லசாமி பிள்ளையவர்களின்

வரலாறு!

—[நல். முருகேச முதலியார்]—

சைவ சித்தாந்தத்தின் கருத்துக்களை ஆங்கிலத்தில் எழுதி உலகெங்கும் பரவச் செய்தவர் காலஞ்சென்ற உயர் திரு. ஜெ. எம். நல்லசாமி பிள்ளையவர்களே ஆவர்.

யேனாட்டு தத்துவ அறிஞர்கள் ஆகமங்களைப் பற்றியும், பாசுபதம், பிரதியபிஞ்ஞை, சைவ முதலியவைகளைப் பற்றியும் அறிந்திருந்தார்கள். ஸ்ரீகண்டபாடியத்தைப் பற்றியும் அறிந்திருந்தார். ஆனால் ஸ்ரீமெய்கண்டதேவர் முறைப்படுத்திய வேதாகமோக்த சைவ சித்தாந்தத்தை அறிந்திலர். டாக்டர் வின்டர்னிட்சு [1] தம் நூலில் சில தந்திரசாத்திரங்களை மட்டும் குறிப்பிட்டார். டாக்டர் பால் டாய்சன் [2] சைவ சித்தாந்தத்தைப்பற்றிக் கூறும்போது சில ஆகமங்களை மட்டும் தான் குறிப்பிட்டார். டாக்டர் மாக்ஸ் மூலர் [3] தமது 'இந்திய அறுவகைச் சமயத்'தைப் பற்றிய நூலிலிருந்துவட மொழி தென்மொழியிலிருந்த சிவாகமங்களின் ஞானபாத நூல்களைப்பற்றி அவர் சிறிது அறிந்திருக்கக் கூடுமென்று ஊகிக்க முடியுமானாலும், அவைகளைப்பற்றி சிறிதளவேனும் விரிவாகக் கூறவில்லை. டாக்டர் எல்.டி. பார்னட் [4] ஒருவர் தான் மெய்கண்டாரின் சுத்த சைவத்தைப்பற்றி அறிந்திருந்தார். பின்னால் வடமொழி சிவஞான போத சூத்திரங்களை

---

1. Geschichte der Indischen Litteratur
2. Das System Les Vedanta, etc.
3. Six Systems of Indian Philosophy
4. Heart of India.

ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். பின்பு மேனாட்டுப்பாதிரி மார்களில் சிலர் தமிழ் சாத்திரங்கள் சிலவற்றை மொழி பெயர்க்கத் தொடங்கினார்கள். அவர்களுள் டாக்டர் கார்ல் கிரால், ரெவ். ஹோய்சிங்டன்4(a) ரெவ். பூவுக்ஸ் முக்கியமான வர்கள். பேராசிரியர்கள் கோவெல்லும் கோவ்வும் 1878ம் ஆண்டில் பதிப்பித்த 'சர்வ தர்சன சங்கிரக[5]'த்தில் சைவதரிசனத்தைப் பற்றிய தாம் எழுதிய ஆங்கிலக்குறிப்புகளில் தென்னாட்டுச் சைவத்தைப்பற்றிச் சிறப்பாகக் குறிப்பித்து, தமிழ் 'சிவஞானபோதம்', 'சிவப்பிரகாசம்' இவைகளைப் பற்றியும் கூறி, அந்நூல்கள் சங்கிரகத்தின் ஆசிரியரான மாதவர் பேசியுள்ள தத்துவத்தைவெகுவாகவிளக்குகின்றனஎன்று எழுதியுள்ளார்கள். ஸ்ரீ சங்கராசாரியார் தமது பிரம்ம சூத்திர பாஷியத்தில் ஓர் இடத்தில் சைவசித்தாந்தத்தைப்பற்றிகுறிப்பிட்டிருப்பதாகவும் அது எந்த மதம் (அதாவதுபாசுபதமா, பிரதியபிஞ்ஞையா) என்று முடிவாகச் சொல்ல இயலவில்லை என்றும் சிலர் கருதுகிறார்கள் [6].

ரெவ். ஹோய்சிங்டன் ரெவ். கிரால் முதலியவர்கள் தமது மொழி பெயர்ப்புகளை ஆராய்ச்சிப் பத்திரிகைகளில் வெளியிட்டார்கள். டாக்டர் போப் "திருவருட்பயனை" [7] மொழிபெயர்த்து தமது "திருவாசக" மொழிபெயர்ப்பில் பின் சேர்த்துக் கொண்டார். ரெவ். "ஹோய்சிங்டன்"சிவப்பிரகாச"த்தையும் ஒருவாறு மொழி பெயர்த்து 1854-ஆம் ஆண்டில் ஒரு பத்திரிகையில் வெளியிட்டதாகத்

---

4 (a)Hoisington H.R., Siva-gnana-potham, Instruction in the Knowledge of God. A metaphysical & Theological Treatise Translated from Tamil with an Introduction and notes.

5. Saiva-Darsana-Sangraha Translated by E. B. Cowell and A. E. Gough—p. 112.

6. Das Gupta, History of Indian Philosophy, Vol V

7. Pope Rev. GU., Tiruvasagam, 1900-pp xliv et seq

தெரியவருகிறது.[8] சுருங்கச் சொல்லின் மெய் கண்ட சாத்திரங்களின் மூல நூல்கள் ஆங்கிலத்தில் அறிமுகமானது சுமார் இந்த அளவுதான் என்று கூறலாம். இவைகளெல்லாம் மேனுட்டவர்களாலேயே செய்யப்பட்டன.[8(a)] தமிழ்நாட்டவர்கள் அதுவரையாதும் அவைபோல் வெளியிட்டதாகத் தெரியவில்லை. யாழ்ப்பாணம் முதலியார் சபாரத்தினம், முதலியார் சபாபதி முதலியோரின் நூல்கள் (சுமார் 1863க்குப் பின்னுல்) மூலங்களின் மொழி பெயர்ப் பல்ல. தமிழ் மூலங்கள் ஏட்டுச்சுவடிகளிலும் மடங்களிலும் மற்றும் கற்றோர் குடும்பங்களில் மட்டும் தான் இருந்தபடியால் ஆங்கிலம்படித்தஇந்தியர்களுக்குக்கூடகிட்டவில்லை.

முதன்முதலாக "சிவஞானபோதத்தையும்" "சிவஞான சித்தியாரையும்" முழுதும் மொழி பெயர்த்துக் குறிப்புரை எழுதிய பெருமை, காலஞ்சென்ற ஜெ. எம். நல்லசாமி பிள்ளையர்களுக்கே உரியது. அவருடைய சிவஞானபோதம் 1893-ல் வெளிவந்தது, பின்னுல் சித்தியாரும் திருவருட் பயன் முதலானவைகளும் வெளிவந்தன.

திரு. பிள்ளையவர்கள் நமது சைவ சித்தாந்த மகா சமாஜம் பிறப்பதற்கு ஒரு கர்த்தராயும் இருந்தவர் [8(b)].

திரு.நல்லசாமி பிள்ளையவர்கள்[9] நல்ல சைவ வேளாளர் மரபில் 24 நவம்பர் 1864ஆம் ஆண்டு அவதரித்தவர். அவர்

---

8. The American Oriental Soc. Journal, 1854 quoted by Pope, p. xilv **ibid**.

8(a). The original translation of Sivagnanabodham & Sivaprakasam by Rev. Hosiengton and that of Sivagnana Siddhiyar by Dr. Graul was published more than forty years ago but they did not seen to have attracted by the attention of European & Indian scholars. Sivagnana Siddhiyar-Tr. by J. M. N.—p. ii of Introduction.

8. (b) சைவ சித்தாந்த மகாசமாஜம் பொன்விழா மலர் சமாஜப்பதிப்பு, 1955—p. 14.

கள் முன்னோர்கள் தொண்டை நாட்டுக் காஞ்சியிலிருந்து சுமார் இருநூற்றைம்பது வருடங்களுக்கு முன் திருசிராப் பள்ளிக்குச் சென்று குடியேறியவர்கள். பிள்ளையவர்களின் பாட்டனார் குமாரசாமிப்பிள்ளை. அவர் நாள் தோறும் திரிசிர புரம் கோட்டையிலிருந்து புறப்பட்டு காவிரியில் நீராடி திரு வானைக்காவில் கோயில் கொண்டுள்ள ஸ்ரீ அகிலாண்டேஸ் வரியை வழிபடும் நியமமுள்ளவர். அவர்களது தனித் தவப்பு தல்வரான மாணிக்கம் பிள்ளைக்கும் செல்லத்தம்மாளுக்கும் பிறந்தவர் நல்லசாமி. தகப்பனார் அரசாங்க அலுவலில் இருந்தார். சிறுவயதிலேயே மறைந்தார். இளம்பருவத் தில் நல்லசாமி கணக்காயரிடத்தில் பொதுக்கல்வியும், ஒரு ஓதுவாரிடத்தில் தமிழ் மறையும் பயின்றார். பின் சென்னை மாநிலக்கல்லூரியில் தத்துவ சாத்திரத்தைத் சிறப் புப்பாடமாகத் தெரிந்து, தமது 19 ஆம் வயதில் பி. ஏ. பட் டம் பெற்றார். பின் சட்டக் கல்லூரியில் பி. எல். பட்டம் பெற்று உயர் நீதிமன்றத்து வழக்கறிஞராக ஆனார். தமது 20ஆம் ஆண்டில் இலட்சுமியம்மையாரைத் திருமணம்செய்து கொண்டார். வழக்கறிஞர் தொழிலில் பிரசித்திபெற்ற (பின்னர்) சர். சுப்பிரமணிய அய்யரிடம் பயிற்சி பெற்றார். 1893ல் ஜில்லா முனிசீப்பாக நியமிக்கப்பட்டு சுமார் இருபது ஆண்டுகள் அரசாங்க நீதித்துறையில் வழுவில்லாமல் பணி செய்தார். பின் உத்தியோகத்திலிருந்து விலகி மதுரையில் 1912ல் வழக்கறிஞராகத் தொழில் புரிந்து வந்தார். மதுரை நகரசபையில் சிறிது காலம் உறுப்பினராகவும் இருந்தார். அலகாபாத்து முதலிய இடங்களில் நடந்த தேசியகாங்கிரஸ்

---

9. வாழ்க்கை குறிப்புகளுக்குமிகவும் உதவியாயிருந்தது. திரு, ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்கள் "செந்தமிழ்ச் செல்வி" மே. 1949 (சிலம்பு 23, பரல் 9) யில் எழுதியகட் டுரை, வேறு தகவல்கள் திரு. ஜெ. எம். நல்லசாமி பிள்ளை யவர்கள் தாமே எழுதிய நூல்களின் முன்னுரைகளிலிருந் தும் யாம் பார்த்த வேறு நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்டன. திருவாசகமணி திரு. கே. எம் பாலசுப்பிரமணியம் ஒரு முழு வரலாற்றை எழுதியுள்ளதாகத் தெரிகிறது. அது இன்னும் வெளியாகவில்லை—நல். மு.

மகாசபைகளுக்கும் விஜயம் செய்தார். தாராளமான மனம் படைத்தவர். விருந்தோம்பல் சுற்றந்தாங்கல் முதலிய பண்புகளுடன் வாழ்ந்தனர். ஆகம ஆராய்ச்சி வல்லுநர். திரு. ரமண சாஸ்திரிகள் மாணவராக இருந்தபோது அவருக்கு எல்லா உதவிகளும் பிள்ளையவர்கள் செய்ததாகக் கூறப்படுகிறது.

சிறு வயதிலேயே பிள்ளையவர்களின் கூரிய அறிவும் நினைவாற்றலும் நன்கு வெளிப்பட்டன. ஓயாத உழைப்பாளி. காலைமுதல் இரவுவரை சிறிது நேரமும் வீணாகக் கழிக்காதவர். இரவில் வெகுநேரம் படிப்பவர். சிறுவயதிலேயே கந்தபுராணம், சித்தாந்த நூல்கள், இராமாயணம், பாரதம் முதலியவைகளில் ஈடுபட்டவர். திரிசிரபுரத்திலிருந்தபோது நாகநாதசுவாமி கோயிலில் சைவ சித்தாந்த சபையொன்றை நிறுவினர். அக்காலத்தில் சைவ சித்தாந்த சூரியனாய் விளங்கிய சிவத்திரு சோமசுந்தர நாயக்கரைக் கொண்டு பல சைவ சமய சொற்பொழிவுகளை நிகழ்த்துவித்தார். நாயகரவர்கள் தொடர்பும், திரு. மதகண்டன வெங்கடகிரி சாஸ்திரியாரவர்களின் தொடர்புமே பிள்ளையவர்களின் சாத்திர ஞானத்தின் வளர்ச்சிக்கும் கூர்மைக்கும் உதவியாக இருந்தது. அதைத்தாமே பாராட்டியுள்ளார்[10]. பிரதி வெள்ளிக்கிழமையும் தம் நண்பர்களுடன் திருவானைக்கா சென்று தரிசனம் செய்து வருவார். வீட்டில் தேவார திருவாசகப் பனுவல்களைப் பாடிப்பாடி இன்புறுவர். எப்போதும்

10. I may also say that my explanation of the text (Sivagnanabotham) has the full approval of Sri-la-Sri S. Somasundara Nayagar of Madras to whom I am largely indebted by means of his lectures and books and pamphlets for the little knowledge of Saiva religion and philosophy which I may possess. Of course, I must not omit to mention my obligations, to Brahmasri Mathakandana Venkatagiri Sastrigal, the great Saiva preacher of Malabar, who is a Siddhanti and follower of Srikanta Charya"- p. vii, 'Sivagnana Botham' Tr. by J M. N. (Dharmapuram 1945)

திருநீறு அணிந்த இன்முகம் படைத்தவர். சைவ சந்நியாசிகளிடத்தில் அன்பும்பணிவும் உடையவர். இதைவிளக்கதிரு. வி.க. அவர்களின் 'வாழ்க்கைகுறிப்புகளில்' ஒருசெய்திகிடைக்கிறது. சென்னையில்செங்கல்வராயநாயகர்தோட்டத்தில்சிவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் என்பவர் முன்னிலையில் பிள்ளையவர்களும் திரு.வி.கவும் 'அத்துவிதம்' என்ற பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். முடிவில் பிள்ளையவர்கள் சுவாமிகளை அடிவணங்கி விடைபெற்றனர். திரு.வி.க. அது செய்யாதுவிடைபெற்றார். வழியெல்லாம் அவர்மனம்அவரை வாட்டியது. வீடு சென்றபின் எங்கும் புலால்நாற்றம் வீசுவது போல் தோன்றியது. உறக்கமும் வரவில்லை. மறுநாள் சுவாமிநளை அடைந்து வணங்கி நிகழ்ந்ததைக்கூறினார். சுவாமிகள் புன்னகை செய்து சிவஞான சித்தியாரைஎடுத்து முதல் எட்டு சூத்திரம் நம்மை பிரிப்பன. பின் நான்குநம்மை சேர்ப்பன என்று கூறி விளக்கினார். திரு.பிள்ளையவர்கள்சிவஞான போதம் படித்ததின் பயனாக 12ஆம் சூத்திரத்தை நடைமுறையில் இயல்பாகவே அனுஷ்டித்தார் போலும்![11]

பிள்ளையவர்களது சைவ சமய ஆராய்ச்சி சிறுபிராயத்திலேயே தொடங்கியது. ஸ்ரீ நாயகர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இவர்களது நூல்களினால் மிகவும் தூண்டுதல் அடைந்தது. அரசாங்க நீதிபதியாய் இருந்த காலத்தும் அது குறையவில்லை. 1893ஆம் ஆண்டில் திருப்பத்தூரில் ஜில்லா முனிசீபாக இருந்தபோது தமது 'சிவஞானபோத' ஆங்கில மொழி பெயர்ப்பை வெளியிட்டார். பண்டிதர் முருகேசம் பிள்ளையும், சென்னை தண்டலம் பாலசுந்தர முதலியாரும் உரைகளை ஆராய்வதிலும், எழுதினதைப் பார்த்துக் கருத்துகள் வழங்கியும் உதவியதாகத் தெரிகிறது[12]. 1897ல் "திரு

11. திரு. வி. க. "வாழ்க்கைக் குறிப்புகள்" சென்னை 1944—p. 102.

12. Sivagnana Botham Tr. by J. M. N. pp. 4—5 of Preface.

வருட்பயனின்' ஆங்கில மொழிப் பெயர்ப்பும்,பின்சிவஞான சித்தியார் மொழி பெயர்ப்பும் வெளிவந்தன.

நூல்களை வெளியிடுவதைப்போல் பத்திரிகைகளும் மிகவும் தேவை என்பதை திரு. பிள்ளையவர்கள் நன்கு அறிந்தார். 1897ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் "Siddhanta Deepika" or Light of Truth என்ற பத்திரிகையையும் தமிழில் உண்மை விளக்கம் அல்லது சித்தாந்த தீபிகை என்ற பத்திரிகையையும் ஆரம்பம் செய்தார். ஆங்கிலப் பத்திரிகையில் பிள்ளையவர்கள் திருமந்திரம், சைவசமய நெறிவிளக்கம், முதலிய சித்தாந்த நூல்களை மொழி பெயர்க்கலாயினார். அப்பத்திரிகையில் பிரம்மசூத் திரத்தின் ஸ்ரீ கண்டபாடியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பும் திரு. மகாதேவ சாஸ்திரி அவர்களினால் வெளிவந்தது. இப்பத்திரிகையில் எல்லா சித்தாந்த ஆகம சாஸ்திரங்களை மொழி பெயர்த்து வெளியிட வேண்டுமென்று பிள்ளையவர் கள் ஆசைப்பட்டார்[13]. ஆங்கில 'சித்தாந்த தீபிகை' மேனாட்டிலிருந்த கீழ்நாட்டுத் தத்துவத்தில் ஈடுபட்ட அறி ஞர்களுக்கெல்லாம் விருந்தாக இருந்தது. முக்கியமாகதமிழ் சாத்திரங்களின் மூலங்கள் மொழி பெயர்ப்பில் வந்ததைப் பேராசிரியர் மாக்ஸ் மூலர் பாராட்டினார்கள்[14]. பல இந்திய ஆராய்ச்சியாளர்களுக்கு இந்தப் பத்திரிகை இடங்கொடுத்

13. Sivagnana Siddhiar Tr. by J. M. N. p. ii of Introduction "Before I lay down my mortal coil, I hope to make it my proud boast that I and my friends and co-workers had translated all the fourteen Siddhanta sastras to gether with other works on Agamanta."

14. "Unfortunately, few scholars only have taken up as yet the study of the Dravidian languages and literature. Such journals as the Light of Truth of the Siddhanta Deepika have been doing most valuable service. What we want are texts and translations and any information that can throw light on the chronology of Indian philosophy"—Prof. Max Muller.

தது[15]. இப்பத்திரிகை 14 ஆண்டுகள் நடந்தது. அதுசைவ சித்தாந்த மகா சமாஜத்தின் பத்திரிகையென்று கூட கருதப் பட்டது. தமிழ்ப் பத்திரிகை ஓராண்டுதான் நடந்தது. 'சித் தாந்த தீபிகை'யின் முழுப்பொறுப்பும் பிள்ளையவர்களதே என்று தெரிகிறது. அதில் பழந்தமிழ் நூல்களாகிய கலித் தொகை, பத்துப்பாட்டு முதலியவைகளின் மொழிபெயர்ப்பு களும் கூட இடம் பெற்றன.

பிள்ளையவர்களது ஆராய்ச்சிக்கட்டுரைகள் பலவற்றைத் திரட்டி 1911ம்ஆண்டில்"Studies in Saiva Siddhanta" 15 என்ற தலைப்பில் வெளிவந்தது. அந்நூலுக்கு டாக்டர் ரமண சாஸ்திரிகள் ஒருசீரிய முன்னுரை எழுதியுள்ளார்கள். அது பிள்ளையவர்களின் மகன் திரு. ஜெ. என். ராமநாதன் அவர்களால் வெளியிடப்பட்டது.

பிள்ளையவர்கள் பெரியபுராண நாயன்மார்களது சரிதங் களின் உட்கருத்தை "Indian Patriot" என்ற பத்திரிகை யில் எழுதலானுர். அவைகளை திரு. ராமநாதன் தொகுத்து ஒரு நூலாக 1924ல் வெளியிட்டார். பிள்ளையவர்களின் பல துறைப்பட்ட கட்டுரைகள்'Tamilian Antiquary,''New Reformer' முதலிய ஆங்கிலப் பத்திரிகைகளிலும் "செந் தமிழ்" "சித்தாந்தம்" முதலிய தமிழ்ப் பத்திரிகைகளிலும் வந்தன.

பிள்ளையவர்கள் 1907ல் கல்கத்தாவிலும்*, 1911ல் அல காபாத்திலும் நடந்த சர்வ சமய சம்மேளனங்களின் (Convention of Religions) ஆகம அத்துவித சமயத்

---

15. "I am glad to say also that I was the means of attracting a large number of students to the study of Tamil Literature, Antiquities and Saiva Philosophy, both in Tamil and Sanskrit and their contributions have found place in the pages of this Journal"—J. M. N., p. ii of Siddhiyar,

*The proceedings of the convention of Religions in India 1909 Published by Vivekananda Society calcutta vol ii p. 110—136.

திற்கு ஆணையாளராகப் பங்கெடுத்துக் கொண்டு அரிய சொற்பொழிவுகளை யாற்றினர். சாத்திர ஞானம் மட்டுமன்றி சொல்வன்மையுமுடையவர். அவர் கட்டுரைகள் Prof. Max Muller (Germany), Prof. Julian Vin-sen (France) Prof Frazer and Dr. L. D. Bar nett (Oxford), Dr. G. U. Pope முதலியவர்கள் கவனத்தை ஈர்த்தன.

சித்தாந்த சாத்திரங்களில் பிள்ளையவர்கள் மொழி பெயர்த்தவை: சிவஞானபோதம், சித்தியார், திருவுத்தியார், உண்மை விளக்கம், வினா வெண்பா, கொடிக்கவி, திருவருட்பயன், இருபா இருபஃது. மற்றைய நூல்களையும் ஸ்ரீ கண்டபாடியத்தையும் வெளியிட அவாவுடையவராக இருந்தார்[17].

பிள்ளையவர்கள் அந்தக் காலத்திலிருந்த சைவப் பெரியவர்களின் நட்பையும் பாராட்டுதலையும் பெற்றிருந்தார். அவர்களுள் அட்டாவதானம் பூவை கலியாணசுந்தர முதலியார், காசிவாசி செந்திநாதய்யர், தூத்துக்குடி சிவகுருநாதம் பிள்ளை, பொ. முத்தையா பிள்ளை, திருப்பாதிரிப் புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், இலங்கை முதலியார் சபாரத்தினம், டி. கோபால செட்டியார் [17a] திரு. வி. கலியாணசுந்தர முதலியார், இருக்கம் ஆதிமூல முதலியார் முதலியோர்கள் ஆவர்.

---

16. Studies in Saiva Siddhanta Meykandan Press, Madras—1911.

17. 'My edition of Sivagnanabodha translation is now out of print and I hope to issue it next together with Sivaprakasam and other minor works after my edition of Srikanta Bhasya is published'—p. xl, of introduction to J. M. N.—Siddhiyar.

17a. D. Gopala Reddi—New Light on Saiva Siddhantha J. M. Dent London.

முக்கியமாக நாகை திரு. வேதாசலம் பிள்ளை (பின்னர் மறைமலையடிகளார்) அவர்களுடன் நெருங்கிய நட்புடைய வராயிருந்தனர் இவ்விருவரும் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமி களின் ஆதரவும் அருளாசியும் பெற்று நமது சைவ சித் தாந்தமகாசமாஜத்தைத்துவக்கிவைத்தார்கள். தமிழ்த்துறை யிலும் சேது சமஸ்தானாதிபதி பாஸ்கரசேதுபதி, உ. வே. சுவாமிநாதய்யர், ரா. ராகவய்யங்கார், கதிரேசன்செட்டியார், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை முதலியவர்களுடைய நட்பைப் பெற்றிருந்தார். டாக்டர் போப்பின் தொடர்பும் பெற் றிருந்தார். சென்னை கவர்னர் ஆம்த்தில் பிரபு ஒரு பேட்டி யில் இவரது மதிநுட்பத்தைக்கண்டு வியந்தார். சிகாகோவி லிருந்து திரும்பி வந்த சுவாமி விவேகாநந்தருடன் பிள்ளை யவர்கள்சந்தித்து [17(b)] பேசுகையில்சைவசித்தாந்தத்தைப் பற்றிப்பேசியதாகவும் சுவாமிகள் தாம் அதுவரை அம்மெய்ப் பொருள்களைப்பற்றிக் கேட்டதில்லை யென்று கூறினதாகவும் தெரிகிறது. பின்னால் பிள்ளையவர்கள் தமது Studies in Saiva Siddantha என்ற நூலை சுவாமிகளுக்கு அனுப் பினதாகவும் தெரிகிறது. ஆனால் சிறிது காலத்துக்குள் சுவாமிகள் பரகதி அடைந்தார்.

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் இரண்டு ஆண்டு விழாக்களில் (நாகப்பட்டினம் 1908, சென்னை 1911) பிள்ளையவர்கள் தலைமை தாங்கியுள்ளார். பல சைவ சபை களை பல்வேறு இடங்களில் நிறுவியும், தலைமை தாங்கியும் சைவத்திற்குத்தொண்டுபுரிந்தார். 1913 ஆம் ஆண்டு வேலூரில் நடந்த சமாஜ ஆண்டு விழாவில் திரு. வி. க. சிவஞான போத மூலம் வடமொழியல்ல என்று கூறியபோது அதை

17b. "On February 8 (1897) a deputation came to him—all Saivaite from Truppathur to ask him questions about the fundamentals of the Advaida philosophy Life of Swami Vivekananda—Advaida Ashram edn 1949—p. 473—474.

'தப்பு, தப்பு' என்று கூக்குரலிட்டதாக எழுதப்பட்டுள்ளது[18].

நல்லசாமி பிள்ளையவர்கள் வாழ்க்கைத் திறனுக்கு அப்படிகளே மேல்வரிச்சட்டமானர்[19] என்பது விளங்குகிறது. இறுதி நாள்வரை அவர் படிப்பிலும் தொண்டிலுமே கழித்தார். சிலகாலம் நீர்நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். அந்நோய் இறுதியில் பிளவையாகத் தோன்றி ஒரு திங்கள் வாட்டியது. தமது 56ஆம் ஆண்டில் 11-8-1920 அன்று சிவன் சேவடி அடைந்தார். இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அவர் மறைவுக்குக் கற்றவர்களும் மற்றவர்களும் வருந்தினார்கள். அவர் பூதவுடல் மறைந்தது. ஆனால் அவர் புகழுடலாகிய அவர் எழுதிய நூல்கள் இன்னும் ஆவலுடன் அறிவாளிகளால் படிக்கப்பட்டுப் போற்றப்படுகின்றன. சைவ சித்தாந்தத்தைத் தெளிவான முறையில் விளக்கியவர் அவரே. அவர்காலத்தில் தமிழ் மூலங்கள் கூட சுலபமாகக் கிடைத்திராது. சிவஞான மாபாடியமும் சித்தியார் அறுவுரைகளும்கூட கிடைத்திராது. நூல்களின் அட்டவணை கிடைக்காததைப்பற்றி அவரே குறிப்பிட்டுள்ளார்.[20] முதன் முதலாக சித்தாந்தத்தைப்பற்றிய அதிகமாக நூல்கள் எழுதியவர் இவரே. இவருக்குப் பின்னும் இதுவரை அதையொத்த அளவில் அத்தகைய பணி எவரும் புரியவில்லை. டாக்டர் ராதா கிருஷ்ணன்போன்ற பேராசிரியர்களின் தத்துவப் பெருநூல்களில்சைவத்தைப்பற்றிக்கூறப்படும் இடங்களில் பிள்ளையவர்களின் நூல்களே சில கருத்துக்களுக்கு ஆதாரங்களாகக்காட்டப்பட்டுள்ளன. பிள்ளையவர்கள் வேறு தத்துவங்களை நன்கு கற்றவராகையால் ஒப்புவமையும் வேற்றுமையும் கூறும் திறம் இவர் நூல்களில் மிளிர்கின்றது. "பிரம்மவாதின்" முதலிய பிற பத்திரிகைகளில் கூறிய கருத்துக்களைப் பல விடங்களில்

---

18. திரு. வி. க. "வாழ்க்கைக் குறிப்புகள்" பக்கம் 602
19. ஜெ. எம். சோமசுந்தரம் பிள்ளை—'செந்தமிழ்ச் செல்வி' மே. 1949.

அவர் வாதாடியுள்ளார். அவர் நுண்மாண் நுழைபுலமும் ஆய்வுத்திறனும் வியக்கத்தக்கது. டாக்டர் போப்[21] இவர்களது சிவஞானபோதம் என்ற நூல் கையுடனிருக்க வேண்டிய ஒரு நூல் என்று எழுதியுள்ளார். டாக்டர் ரமண சாஸ்திரி[22] இவர்களின் ஆழ்ந்தகன்ற படிப்பைவியந்திள்ளார்கள்.

திரு. பிள்ளையவர்கள் சைவ சித்தாந்த நூல்களை ஆங்கிலப்படுத்தித் தமிழ்ப்பெருமையையும் சைவப்பெருமையையும் மேல்நாடுகளுக்குத் தெரியும்படி செய்தவர். "அவரது புலமைத் திறனும் ஆய்வுத்திறனும் தமிழ்நாட்டில்வேறெவர்க்குண்டு" என்று கேட்கும்படியான உயர்ந்த நிலையில் திகழ்ந்தவர். அன்னாருடைய ஊக்கம் இல்லாதிருக்குமாகில், சைவ உலகம் தற்போது அடைந்துள்ள மேல்நிலைமை அடைய வாய்ப்பு இருந்திருக்காது.

இந்தப் பெருமகனாரை திரு. சி. எம். ராமச்சந்திரன் செட்டியார் "சைவ மன்னுதி மன்னர்" என்று பாராட்டுகிறார்[23]. பிள்ளையவர்களின் புகழ் நீடு நிலவுக! அவர்காட்டிய வழியை நாம் பின்பற்றுவோமாக!

---

20. "There was hardly any bibliography on the subject in English before I commenced my work—p. ii. of "Studies in Saiva Siddhanta".

21. "Mr. J. M. Nallaswami Pillai, a learned Saivaite of Madras has recently published a translation of Siva jnana-bodham with valuable notes which is a most useful compendium—p. xliii of "Tiruvasagam".

22. "One of the most well-informed interpreter of the Tamil development of the great Agamic School of thought"—p. 1 of Introduction to "Studies in Saiva Siddhanta".

23, சமாஜப் பொன் விழா மலர்—p, 10.

சிவமயம்

இரண்டு மணிகள்

(சத்தும் சதசத்தும்)

[திரு. ஜெ. எம். நல்லசாமிப் பிள்ளை இயற்றிய "Studies in Saiva Siddhandha" என்ற ஆங்கிலக் கட்டுரைத் தொகுதி நூலிலுள்ள ஒரு கட்டுரையின் தமிழ்ச் சுருக்கம்.]

கொ. நீ. சிங்காரவேலு, M. A.

—★—

இக்கட்டுரையில் திருமந்திரத்திலுள்ள பின்வரும் இரண்டு பாடல்களை ஆராய்வோம் :—

"பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்
தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர ணங்களே.
மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே"

இவ்விரண்டு பாக்களும் ஒரே கருத்தைக் கூறுவது போல யிருப்பினும், கூர்ந்து நோக்குழி அவை இரு வேறு கருத்துக்களை விளக்குவது புலனாகும். இவை, ஆன்மாவின் பந்த நிலையையும் முத்தி நிலையையும் விளக்குவதோடல்லாமல் ஆன்மா, படிப்படியாகத் தத்துவ தரிசனம், ஆன்ம தரிசனம், சிவ அல்லது பர தரிசனம் அடைவதை விளக்குகின்றன.

முதற்பாட்டில் நாம் பார்ப்பது ஒரு பொன்னாலாகிய அணிகலன். அதை இரண்டு விதமாகப் பார்க்கலாம். பொன்னின் மாற்றைப் பற்றி ஆராயலாம். அல்லது அதன் வேலைப்பாட்டை ஆராயலாம். பொன்னின் மாற்றை ஆராயும்போது அணிகலனின் வேலைப்பாட்டை மறந்து விடுகிறோம். வேலைப்பாட்டை ஆராயும்போது பொன்னை மறந்து விடுகிறோம். ஆனால் இரண்டும் உள் பொருள்களே. அதைப்பற்றி நமக்கு ஐயமில்லை. அணிகலனை வாங்கும்போது இரண்டின் தரங்களையும் ஆராய்ந்தே வாங்க வேண்டும் என்பதை நாம் அறிவோம்.

பின் இரண்டடிகளில் ஆன்மாவிற்கும் பாசத்திற்கும் உள்ள தொடர்பு குறிக்கப்படுகிறது. 'தன்' என்பது ஆன்மாவைக் குறிக்கும், மனிதன் உலகமுகப்பட்டு, தன் கரணங்களிலும், உடம்பிலும், உலகத்திலும் அழுந்தும் போது தன்னை மறக்கிறான். தன்னை நோக்கும்போது உலகத்தை மறக்கிறான். திருமூலர் உலகத்தையோ ஆன்மாவையோ பொய்யென்றோ, வெளித்தோற்றமென்றோ கூறவில்லை. ஆன்மா பாசத்தில் அழுந்தும்போதுதான் மறைந்திருக்கிறது; தன்னையே நோக்கும்போது பாசம் மறைந்து விடுகிறது. ஆன்மா பாசத்தில் அல்லது உலகத்தில் மறைந்திருக்கும் நிலை பந்த நிலை எனப்படும். ஆன்மா தன்னையும் பாசத்தையும் பிரித்துப்பார்க்கும் நிலை தத்துவ தரிசனமும் ஆன்ம தரிசனமும் கைவரப்பெற்ற நிலையாகும். இத்தொடர்புகளை உணர்வதின் அடிப்படையில்தான் ஒழுக்கம் என்ற கட்டிடம் எழுப்பப்படும். மனிதன் உலகத்தில் அழுந்த அழுந்த அவன் துன்பத்தில் ஆழ்கிறான். உலகப்பற்றை விட விட அவன் ஆன்மீக வலிமை பெற்று ஒழுக்க நெறியில் தளராது நிற்கிறான்.

ஆன்மா சத்திற்கும் அசத்திற்கும் இடைப்பட்ட நிலையில் உள்ளது. ஆகையால் அது சதசத்து (சத்+அசத்து) என்று அழைக்கப்படும். இந்த நுண்ணிய கருத்தை நமக்குத் தெரிந்தவரையில் வேறெந்த தத்துவ நூலும் கூறவில்லை. ஆன்மாவின் இவ்விலக்கணத்தை 'ஒழிவிலொடுக்கம்' இயற்றிய கண்ணுடைய வள்ளலார் 'அலி' என்ற பெயரினால் விளக்குகிறார். 'அலி' என்ற சொல்லுக்கு

இலக்கணப்படி தனி 'பால்' கிடையாது. "ஆணுறுப்பு மிகுந்தால் ஆணாகும், பெண்ணுறுப்பு மிகுந்தால் பெண்ணாகும்" என்னும் இலக்கணப்படி அலி அவன் என்றும் அவள் என்றும் குறிக்கப்படும். இதுபோல ஆன்மாவிற்குத்தனிப்பட்ட குணமில்லை. அசத்தோடு கூடி அசத்தாகவும், சத்தோடுகூடி சத்தாகவுந்தான் நிற்கும். இறைவனும் உலகமும் இல்லையானால் ஆன்மாயில்லை. இக்கருத்தை மெய்கண்டார் இரண்டு உதாரணங்களைக் கொண்டு விளக்குகிறார்.

எப்பொருளும் ஆகாயத்தில் ஆதாரமின்றித் தனித்து நிற்க முடியாது. ஆன்மா ஒரு ஊஞ்சலைப் போன்றது என்றார் மெய் கண்டார். ஊஞ்சல் கயிற்றால் மரக்கிளையில் கட்டப்பட்டுள்ளது. ஊஞ்சலுக்கு மரம் ஆதாரமாகவுள்ளது. கயிறு அறுந்தால் நிலத்தின் இழுப்புச் சக்தியால் ஊஞ்சல் தரையில் விழுகின்றது. அதுபோல ஆன்மா மாயைக்கும் இறைவனுக்கும் மத்தியில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. அது மலப்பற்றற்றதும் இறைவனைச் சேரும். பழம் முதிர்ந்து பக்குவமடைகின்ற வரையில் மரத்திலிருக்கும். பக்குவப்பட்டதும் மரம் அதை நிறுத்திவைக்க முடியாது. பக்குவப்பட்ட ஆன்மாவாகிய பழம் பாசமாகிய மரத்தை விட்டு இறைவனாகிய நிலத்தை அடைந்தே தீரும். அதுவரையில் நிலத்தின் சாற்றினால் (இறை அருளால்) மரத்தின் மூலம் காய் பழுக்கிறது.

மெய்கண்டார் கூறும் மற்றொரு உதாரணம், அணையால் நிறுத்தி வைக்கப்பட்ட வெள்ளம். அணை நீங்கினவழி கடலில் சென்று கலத்தல்போல, மாயையால் தடுப்புண்ட ஆன்மா, மாயை அகன்ற வழி இறைவனைச் சேரும் என்பதாகும். இவ்வணையைப் "பற்று" என்றும் கூறுவர். இக்கருத்தையே திருவள்ளுவரும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை, யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்று விளக்குகிறார்.

பின்வரும் மணிவாசகர் வாக்கும் இதையே வற்புறுத்தும்:—

"சுற்றிய சுற்றத் தொடர்புஅறுப்பான் தொல்புகழே
பற்றிஇப் பாசத்தைப் பற்றுஅறநாம் பற்றுவான்,
பற்றியபேர் ஆனந்தம் பாடுதும்காண்; அம்மானாய்"

ஆன்மாவின் இவ்விலக்கணத்தை அறியாதுபண்டைய பௌத்தரும்,தற்காலத்திய நிரீஸ்வரவாதிகளும்இடர்ப்படுகின்றனர். அவர்கள் ஆன்மாவின் முடிந்த ஆதாரமாகிய இறைவனின் உண்மையை மறுத்து,தங்கள் தத்துவத்தைச் சூன்ய வாதத்தில் முடிக்கின்றனர். பௌத்தர்களுக்கு ஆன்மாவின் பரிபக்குவ நிலைதான் அதன் அறிவுநிலையாகும்.

சைவ சித்தாந்தத்தின்படி ஆன்மா இறைவனோடு கூடியபோது அது உலக உணர்வை விட்டதுமல்லாமல் தன்னுணர்வையும் விட்டு விடுகின்றது. அந்நிலையில் ஆன்மா அன்பும் ஆனந்தமுமாகிய அனுபவ நிலையிலேயே நிற்கும்:—

"பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்"
"சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றும்"

இவ்வனுபவத்தை மனத்தில் கொண்டுதான் சங்கரர் இறைவன் தவிர வேறொன்றும் இல்லை என்று எண்ணுகிறார். ஆனால் அது உண்மையன்று. இறைவனோடு கலந்த நிலை துரியம் அல்லது பர அவஸ்தை என்று சொல்லப்படும். இந்நிலையில் உலக உணர்வும் தன்னுணர்வும் இல்லாமற் போனாலும், அவைகளின் இருப்பு அழிந்து போகவில்லை. இக்கருத்தையே திருமூலர் "மரத்தை மறைத்தது மாமதயானை" என்று தொடங்கும் மேற்குறித்த இரண்டாம் பாட்டில் விளக்குகிறார்.

இப்பாட்டின் பின்னிரண்டு அடிகளில் இறைவன் உலகத்தால் மறைக்கப் படுகிறான். உலகம் இறைவனால் மறைக்கப்படுகிறது என்கிறார். இரண்டும் எப்பொழுதும் இல்பொருளாக ஆனதில்லை என்பது போதரும்.

மற்றும் "தன்னை மறைத்தது தன் கரணங்களாம்' தன்னின் மறைந்தது தன் கரணங்களே" என்றவிடத்து இரண்டு பதார்த்தங்கள், அதாவது, ஆன்மாவும், உலகமும் கூறப்படுகின்றன. இதைப் புரிந்து கொள்வதற்கு வேறு பதார்த்தம் தேவையில்லை. ஆனால் 'பரத்தை மறைத்தது பார் முதற் பூதம், பரத்தின் மறைந்தது பார் முதற் பூதம்" என்புழி மூன்றாவது பதார்த்தமாகிய ஆன்மா தொக்கு நிற்கின்றது. பரத்தையும் பார் முதற் பூதத்தையும் அனுபவிக்கும் ஆன்மா யில்லையேல் மறைதலுக்கும் மறைத்தலுக்கும் பொருளில்லை. இவ்வடிகளில் சத்தையும் அசத்தையும் கூறியிருந்தாலும், மூன்றாவது பொருளாகிய சதசத்தையும் கூறாமலே குறித்து முப்பொருளுண்மை விளக்கப் பெற்றிருக்கிறது. மேற்குறித்த கருத்துக்களே சிவஞான போதத்தின் ஏழாஞ் சூத்திரத்தில் விளக்கப் பெற்றிருக்கின்றன.

இறைவன் ஒளி எங்கும் நிறைந்த பேரொளி. நம் ஒளிகளெல்லாம், துண்டுபட்ட, அவன் ஒளியைப் பிரதிபலிக்கும் ஒளிகள். அவ்வொலியின்றி நாம், இருளில் சிந்திய வைரத் துண்டுகள் போல்வோம். பந்த நிலையில், சாணை பிடிக்காத வைரங்கள் போன்று அவனுடைய ஒளியைப் பிரதிபலிக்க முடியாதவர்களாக இருப்போம். நாம் ரத்தினப் பளிங்குகள். இறைவன் அவைகளில் பிரகாசிக்கும் ஒளி. "வெண் பளிங்கின் உட்பதித்த சோதியனே!" பளிங்கைப் போன்று நாம் ஒளியில் ஒளியாகவும் இருளில் இருளாகவும் உள்ளோம். யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நின்ற பந்தமறும் பளிங்கனையம் யாம்." இறைவன் யாவற்றையும் தந்நிறமாக்கும் மரகதமணி போன்றவன்.

"எவ்வெவர் தன்மையும் தன்வயிற் படுத்தும்
தானே யாகிய தயாபரன் எம்மிறை"

பளிங்கு சார்ந்ததன் வண்ணமாகும் மரகதம் சார்ந்து தன் வண்ணமாக்கும். ஆன்மா பளிங்கு போன்றது. இறைவன் மரகதம் போன்றவன். இம்மரகத ஒளிதான் உமை. இறைவி தன் பசுமை ஒளியால் நம்மை ஆட்

கொள்கின்முள். பாநயமும், தத்துவ நயமும் நிறைந்த பின்வரும் குமரகுருபரர் பாடலோடு இக்கட்டுரையை நிறைவு செய்கிறோம்.

''பண்ணுறு கிளிமொழிப் பாவைநின் திருமேனி
பாசொளி விரிப்பவந்தண்,
பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்,
பருமுத்தம் மரகதமதாய்,
தண்ணுறு மல்லற் றுறைசிறை யனங்களி
தழைக்குங் கலாமஞ்ஞையாய்
சகலமும் நின்திருச் சொருபமென் றேலிடும்
சதுர்மறைப் பொருள்வெளியாகும்''

உ

கடவுளின் சொரூபம்

[திரு. நல்லசாமிப்பிள்ளை சித்தாந்த தீபிகையில் எழுதிய இவ்வாங்கிலக் கட்டுரை சுவாமி வேதாசலம் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு, 1912 ஜனவரி சித்தாந்தம் இதழில் வெளிவந்தது.]

கடவுளான ருத்ர சிவன் பாட்டுக்களுக்குப் பதி என்றும், யாகங்களுக்குப் பதி என்றும் ருக் வேதத்தில் பேசப் பட்டிருக்கின்றனர்.

'காத பதிம் மேத பதிம்,

இங்ஙனம் சிவபெருமான் பசுபதியாகிய தலைமை தெளிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

எஜுர் வேதத்தில் அவர், ருத்ரன் ஒருவனே இரண்டாவதொன்றில்லை யெனப் பேசப்பட்டிருக்கின்றூர்.

"ஏக ஏவருத்ரா நத்விதியாய தஸ்தே"

என்னும் இது, பின்னர்ச் சாந்தோக்கிய தைத்திரீய உபநிடதங்களில் சத் எனவும், பிரமம் எனவும், இரண்டாவதில்லாத ஒன்று எனவும் சொல்லப்பட்டிருக்கின்றது.

சதேவ சௌம்யத மாக்ர ஆஸீத் ஏகமே வாத்விதீயம் பிரஹ்மா:—அவர் ஒன்றேயாம் தன்மையைத் திருமூல மஹருஷியும்,

"ஒன்றவன் ருனே இரண்டவ னின்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தா னைந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றவன் ருனிருந் தானுணர்ந் தெட்டே"

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பகவான் மெய்கண்ட தேவரும்,

"ஒன்றென்றது ஒன்றேகாண் ஒன்றேபதி, பசுவாம்
ஒன்றென்ற நீபாசத் தோடுளேகாண்—ஒன்றின்ருல்
அக்கிரங்க ளின்ரும் அகரஉயி ரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு"

என்று அருளிச் செய்தனர்.

"கடவுள் ஒன்று, ஒன்று மாத்திரமே, இவ்வொன்றே பதி" ஆகவே இந்து சமயத்தின் மிகப் பழைய சொரூபமான சைவ சமயமானது கடவுள் ஒன்றென்றும், இரண்டாவதில்லாத ஒன்று மாத்திரமே என்றும் வலியுறுத்துக் கூறுகின்றது. கடவுளின் சத்திகள் பலதிறப்படும். அவை வழக்கமாய் ஞானசத்தி, இச்சாசத்தி, கிரியா சத்தி என்று மூன்று கூருக வகுக்கப் பட்டிருக்கின்றன. இவை யெல்லாம் அவருடைய அருள் அல்லது கிருபா சத்தி என்றும், கடவுள் அன்பே உருவாக உள்ளவர் என்றும் சொல்லப்படும்

"அன்புஞ் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிகிலார்

அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே.''

எனவே, சுருங்கச் சொல்லுங்கால் கடவுள் சத்துச் சித்து ஆனந்தமாவார். அதுவே சச்சிதானந்த சிவம்.

அவர் உலகங்களைப் படைக்க எண்ணுகிறார். அங்ஙனமே அவற்றைப் படைக்கிறார், அவற்றைத் திரும்பத் திரும்ப அழிக்கிறார். இதனை அவர் ஏதொரு நோக்கமும் இன்றியாவது, தனது உல்லாசத்தின் பொருட்டாவது, தான் நினைத்தபடியெல்லாமாவது செய்பவர் அல்லர்; ஏனெனின், அவர் அன்பே உருவாக உள்ளவர் என்பதை அறிவேம் அல்லமோ? அறியாமையில் அகப்பட்டுத் தவறுகின்ற உயிர்களை அதனின்றும் மேலெடுத்து, அவர்களுக்கு உடம்புகளையும் இந்திரியங்களையும் கொடுத்து அவற்றால் அவர்கள் தாமே தம் எண்ணப்படி நடந்து நன்மை தீமைகளை அறிவிக்கும் மரத்தின் கனிகளைச் சுவைத்துத், துன்பத்தாலும் துயரத்தாலும் திருத்தஞ் செய்யப்பட்டுச் சுத்தமாகிப் பரம் பொருளின் திருக்குறிப்பின் வழியே தமது குறிப்பையும் நிறுத்தத் தெரிந்து கொள்ளும்படி செய்விக்கின்றார்.

ஆசாரிய சுவாமிகளான மாணிக்கவாசகர் பின் வருமாறு அருளிச் செய்திருக்கின்றார்.

''நிலம்நீர் நெருப்பு உயிர்நீள் விசும்பு நிலாப் பகலோன்
புலனாயமைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகேழெனத் திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ''

இவ்வெட்டு வடிவங்களினும் அவன் நிறைந்திருக்கிறான்: இவ்வெட்டும் அவனுக்கு உடம்புகளாயிருக்கின்றன; ஆதலினாலேதான் சிவபெருமான் அட்டமூர்த்தியென்று சொல்லப்படுகின்றார். இதனாலே அவர் அந்தரியாமி யாந் தன்மையும் அல்லது எங்கும் உண்மையும் அல்லது அவர் அறிவுப் பொருளாகலின் னுள்ளும் இருத்தலும் இனிது நாட்டப்படுகின்றது. என்றாலும் அவர் இவையெல்லா வடிவங்களுக்கும் அப்பாற்பட்டவராயும், மனிதனுக்கும் மாயை

எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவராயும், எல்லாங் கடந் தவராயும் இருக்கின்றார்.

இவ்வெட்டு வடிவங்களிலும் நிறைந்திருத்தல் பற்றி அவர் எண் பெயர்கள் உடையவராயிருக்கின்றார்.

"ப்ருதிவ்யோ பவ :, ஆபாச்சர்வ; அக்நேருத்ர: வாயுர் பீம: ஆகாஸஸ்ய மகாதேவ: சூர்யஸ்ய உக்ர: சந்த் ரஸ்ய சோம: ஆத்மாந : பசுபதி: 'பூ' என்கின்ற பகுதிக் குச் சத் அல்லது இருப்பது என்பது பொருளாகலின், பிர மம் எக்காலத்தும் எவ்விடத்தும் இருத்தல் பற்றி அது பவன் என்று சொல்லப்படுவதாயிற்று. இதனால் பிரமம் எல்லாப் பொருள்களினும் ஊடுருவி விளக்குவது என்று அறிவுறுத்தப் படுகின்றோம்,

இனி 'சிரீ' என்கின்ற பகுதிக்கு அழித்தல் என்பது பொருளாகலின், சங்கார கருத்தாவாகிய பிரமத்திற்குச் சர்வன் என்னும் பெயர் உண்டாயிற்று.

இனிச் சமுசார நோயை ஒழித்தல் பற்றிப் பிரமத் திற்கு உருத்திரன் எனும் பெயர் உண்டாயிற்று. இனி எல்லா உயிர்களுக்கும் விதிப்பவன் ஆதல் பற்றியும் அவர் களால் அஞ்சப்படுபவன் ஆதல் பற்றியும் 'பயங்கரமான வன்' என்றும் பொருளைத் தரும் பீமன் என்னும் பெயர் பிரமத்திற்கு வழங்கப்படுவதாயிற்று. சுருதியும், அவனி டத்துள்ள அச்சத்தால் காற்று வீசுகின்றது என்றுரைக் கின்றது' (தைத்திரீய உபநிடதம், 2, 8)

இனிப் பெரியனும் ஒளியுருவனுமாய் இருத்தல் பற்றி சிவபெருமான் மகாதேவன் என்று சொல்லப்படுகின்றான். இங்ஙனமே அதர்வசிரசு பநிடதமும் கூறுகின்றது—"எது அவ்வாறு மகாதேவன் என்று சொல்லப்பட்டது? எல்லாப் பொருள்களையும் அறத்துறந்தது பற்றி, அவன் தனது ஆன்ம ஞானத்தின் பொருட்டாக உபாசிக்கப்படுகின் றான். அதனாலேதான் அவன் மகாதேவன் என்று சொல் லப்பட்டதும்,"

இனி வேறொருவரால் செயிக்கப்படாதது பற்றிப் பிர மம் உக்கிரன் என்று பெயர் பெறலாயிற்று. அங்கே

சூரியனும் விளங்குதல் இல்லை, சந்திரனும் நட்சத்திரங்களும் விளங்குதலில்லை'' (சுவேதாசவதர உபநிடதம் 6, 14)

அப்பரம்பொருள் படைத்தற்றொழில் புரிதல் பற்றி அரன் எனவும், காத்தற்றொழில் புரிதல் பற்றிச் சங்கரன் எனவும், அழித்து மீளத் தோற்றுவித்தல் பற்றி உருத்திரன் எனவும், பரமானந்தத்தைத் தருதல் பற்றிச் சிவன் எனவும் பெயர் பெற்று வழிபடப்படுகின்றது.

கடவுள் எண்குணங்கள் உடைமையினாலே எண்குணத்தான் என்று பெயர் கூறப்படுகின்றது. எண்குணங்களாவன:—

தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கை உணர்வினனாதல், பேர் அருளுடைமை, வரம்பில் ஆற்றலுடைமை, வரம்பில் இன்பமுடைமை, முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல்.

இவற்றுள் 'முற்றுமுணர்தல்' என்பது, புறக்கருவிகளின் உதவி சிறிதும் வேண்டாமல் மலினம் அற்ற இயற்கை உணர்வுக்கு எல்லாப் பொருள்களும் நேரே புலனாகும்படி அறிந்தாங்கறிந்து நிற்றல், இதுவே சருவஞ்ஞத்துவம்.

என்றும் நிறைவு எனப்படும் நித்திய திருப்தித்துவம் என்பது, தனக்குமேல் ஒன்றில்லாததாய்த் துன்பம் என்பது தன்கண் தினைத்துணையும் இல்லாததாய் உள்ள பேரின்பத்தால் நிரம்பி நிற்றல். இதுபற்றியே "பிரமம் ஆனந்தம்" என்னும் சுருதி வாக்கியமும் எழுந்தது.

(தைத்திரீய உபநிடதம் 3, 6.)

சுவாதாச்சிதம் என்பது தானாகவேயுள்ள தனக்கு மேலொன்றில்லாத பேரறிவுடைமையாகும்—இதுவே ஆதியில்லாத அநாதிபோதம் என்றுஞ் சொல்லப்படும்.

சுவதந்திரம் என்பது பிறர்வயப்பட்டிராமையும் தன்பாற் கீழ்த்தரமான அடையாளங்கள் இன்றித் தன்னை

யொழிந்த எல்லாவற்றையுந் தன் ஆட்சிக் கீழ் வைத்து நடத்துவதும் ஆகும்.

என்றுந்தவரு ஆண்மை எனப்படுவதாகிய நித்தி யனுப்த சத்தித்துவம் என்பது, தன்னியற்கையில் எல்லா வல்லமையும் பொருந்தப் பெற்றிருத்தல். அளவுபடாத ஆற்றலுடைமையே முடிவற்ற வல்லமை எனப்படுவதா கிய அநந்த சத்தித்துவமாகும். முடிவுபடாத இவ்வாற்றல் களை உடைமையினலேதான் பிரமமானது உலகத்தைத் தோற்றுவித்து அதனை ஆளுதல் செய்கின்றது.

சைவ சித்தாந்தத்தின்படி கடவுள் உண்மைப் பொரு ளாகிய சத்தாய், அறிவுப்பொருளாகிய சித்தாய்க் குணி ரூபமாயுள்ள உயிர்ப்பொருளே யாகுமல்லது உயிரில்லாது இறந்துகிடக்கும் சடசத்தி அன்று. கடவுள் குணங்களற்ற பொருளன்று. அங்ஙனமாயின் கடவுளை நிர்க்குணன் என்றும் குணதீதன் என்றுங் கூறுவதென்னை யெனின் தத்துவம், இராசதம். தாமதம் என்னும் மாயா குணங் கள் உடையன் அல்லன் என்பதே அச்சொற்களுக்குப் பொருளாம். சகுணம் என்பது இம் முக்குணங்களையு முடையதாகும்.

கடவுள் அவன் அவள் அதுவென்றும் மூவகை வடி வினஞக ஓதப்படினும், அவன் அவை ஒன்றும் அல்லன். கடவுள் உருவமும் அல்லன். அருவமும் அல்லன். அருஉரு வமும் அல்லன்; என்றாலும் அவன் நம் பொருட்டுத் தன் அருளையே தனக்குத் திருமேனியாகக் கொண்டு தோன்றி அருள் புரிவன். கடவுளாகிய சிவபெருமான் பிரமா, விஷ்ணு, உருத்திரன் என்னுந் திரிமூர்த்திகளில் ஒருவன் அல்லன: "சிவம் சதுர்த்தம் சாந்தம் அத்வைதம்" என்று உபநிடதங்களில் கூறப்பட்டபடி அவர்களுக்கு அப்பாற்பட்ட நான்காவது பொருள் ஆவான். கடவுள் தாய்க் கருப்பையுட் படாதவனுகலின், அவன் நம்மனே ரைப் போலச் சடவுடம்பு கொண்டு மனிதாவதாரம் எடுப் பவனும் அல்லன்; பின்பு இறப்பவனும் அல்லன். அதி ஞலேதான் அவன் அஜன் அல்லது பிறவாதவன் என்றும் அமிருதன் அல்லது இறவாதவன்என்றும் வேதங்களிலும்

உபநிடதங்களினும் ஓதப்படுகின்றான். திருமூல மஹருஷியும்

"பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமு மாமே"

என்று திருவாய் மலர்ந்தருளினர்.

முற்போந்தவற்றை எல்லாம் தொகுத்துச் சொல்லுங்கால், உண்மையான வேதாந்த சித்தாந்த தத்துவத்தின்படி கடவுள் சத்து சித்து ஆனந்தம் ஆவரென்பதூஉம், அவர் சடப் பொருளும் ஆகார் சடப் பொருளாற் பற்றப்படுவரும் ஆகார் என்பதூஉம்; அவர் நிர்க்குணராயும் குணிப்பொருளாயும் என்றும் ஆனந்த நிறைவினராயும் அன்பே வடிவினராயும் படைத்தல் முதலாகிய தன் எல்லாச் செயல்களையும் அருளாற் செய்பவராயும் உள்ளவரென்பதூஉம்; அவர், அவன், அவள் அது வென்றும் ஒன்றும் அல்லாதவராயும், சடரூப அரூபங்கள் உடையரல்லராயும், தம்மை அன்பால் வழிபடுவார்க்குத் தம் அருளினையும் மாட்சியினையும் புலப்படுத்துபவராயும் இருப்பர் என்பதூஉம்; அவர் பிறக்கவும் இறக்கவும் மாட்டாதவராகையால், மலமாயா கன்மங்கள் என்னும் வலையில் அகப்பட்டுப் பதைப்புறும் உயிர்களை அவற்றினின்றும் பிரித்தெடுத்து நிறுத்த வல்லவராகிய வரம்பற்ற தனித் தலைமைத் தூய கடவுளா மென்பதூஉம்; அவரை உண்மையான நம் அப்பன் என்றும் சகோதரன் என்றும் அறிந்து அவரை உண்மை அன்பால் வழிபடுதல் ஒன்று மாத்திரமே பிழைபடும் உயிர்கள் செய்யும் தீமைகளை எல்லாம் போக்கும் மருந்தா மென்பதூஉம் இனிது பெறப்படும் என்க. ஓம் சிவாய நம:

கார்த்திகை மாத விசேட தினங்கள்

4	(19—11—64)	கணம்புல்ல நாயனர் விழா
,,	,,	கார்த்திகை விளக்கீட்டு விழா
13	(28—11—64)	மெய்ப்பொருள் நாயனர் விழா
14	(29—11—64)	ஆனய நாயனர் விழா
20	(5—12—64)	மூர்க்க நாயனர் விழா
21	(6—12—64)	சிறப்புலி நாயனர் விழா

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர்கள் தங்கள் சந்தாத்தொகை ரூபாய் மூன்றை டிசம்பர் மாதம் 31—12—64க்குள் அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். வி. பி. பி.யில் ஜனவரி மாத இதழை அனுப்புவதாயின் 75 புதுக்காசுகள் வீணாக அதிகம் செலுத்த வேண்டியிருக்கும். மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப்பெயர், 2. சந்தா எண், 3. தெளிவான முழு விலாசம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள அன்பர்கள் அரசியலார் இசைவு பெற்றுத் தங்கள் சந்தாத்தொகையினை தவறாது அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு: கே. இராமநாதன் செட்டியார் B, A. B. L, அவர்களிடத்துச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள். சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழ மாட வீதி, மயிலாப்பூர்; சென்னை-4.

பிறசெய்திகள்

திருக்கோயில் உள்ள தெய்வத் திருவுருவங்களின் நுட்பங்களையெல்லாம் தம் அலுவலிலுள்ளபோதும் அதினின்று விடுதலையுற்றபோதும் நுனித்தறிந்து பல இதழ்களின் வாயிலாக நம்மக்களுக்கு எடுத்து விளக்கும் மாண்பினையே தம் தொண்டாகக் கொண்டவர்களுள் சிறந்து விளங்குகின்றவர் உயர்திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களும் ஒருவர். அவர்கள் நம் சமாஜ மாநாடுகளிலும் வாய்ப்புள்ளபோது கலந்து சொற்பொழிவுகளாற்றியுமிருக்கிறார்கள். நம் சமாஜ உறுப்பினருமாவர். அவர்களுக்கு 19-7-64 அன்று திருநெல்வேலியில் அறுபதாவது ஆண்டு நிறைவு விழா சிறப்புறநிகழ்ந்ததை அறிந்து மகிழ்வெய்துகின்றோம். "இன்னும் ஒரு நூற்றாண்டிரும்" என்ற ஒரு பெரியாரின் வாழ்த்தினை ஒட்டியே பல்லாண்டென்னும் பதங்கடந்தான் திருவருளால் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்து நம் சமயத்திலுள்ள திருவுருவநுட்பங்களை விளக்கி நம்சமயமுன்னேற்றத்திற்குப் பாடுபட அவனருளையே வாழ்த்தி வணங்குகின்றோம்.

யாழ்ப்பாணம், நாகர்கோயில், கடலூர் முதலியவிடங்களில் நிகழும். தேர்வு எழுத விரும்புவோர் அங்கு காலை 10 மணி யளவில் தேர்விடத்தில் இருக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

28—11—64	காலை	(10—1)	இலக்கணம்
,,	மாலை	(2—5)	இலக்கியம்
29—11—64	காலை	(10—1)	சாத்திரம்
,,	மாலை	(2—5)	உரைநடை

பிற செய்திகள்

திரு. R. S. பழமலை அவர்கள், (போஸ்டு மாஸ்டர் ஓதியன் சாலை போஸ்டு, புதுவை) மாநாட்டில் வாக்களித்த படி பத்து உறுப்பினர்களைச் சேர்த்துத் தந்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலேயாவின் தலைநகரத்திற்கு 43 மைல் தூரத்திலுள்ள சிரம்பான் நகரத்திலுள்ள சித்திவிநாயகர் ஆலயத்தில் உயர் திரு சைவப் பெரியார் கா. இராமநாதன் செட்டியார் பி. ஏ., பி. எல்., அவர்களால் 7—7—1964 முதல் சிவஞானபோத வகுப்பு 16 வாரங்கள் செவ்வாய்தோறும் நடத்தப்பெற்று வந்தது. சுமார் 30 பேர்கள் தவறாது அவ்வகுப்பில் கலந்து படித்துவந்தனர்.

25—10—64 அன்று அதன் நிறைவு விழா சிறப்புற நடைபெற்றது. மாணவர்கள் ஒவ்வொரு சூத்திரம் பற்றியும் அன்றே பேசி இன்புற்றனர்.

11—11—64 முதல் கோலாலம்பூரில் திரு. செட்டியார் அவர்களாலேயே சிவஞானபோத வகுப்பு விவேகானந்த ஆசிரமத்தில் நடத்தப்பெறும். வியாழன்தோறும்6-00to7-20 மணிக்கு நடக்கும். மலேயா அன்பர்கள் இவ்வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுகின்றோம்.

அருணந்தி சிவாச்சாரியார் விழா

இச்சந்தான குரவரின் குருபூசை விழா நாகர்கோயில் நன்னெறி மன்றத்தின் சார்பில் 3—10—64ல் மாலையில் இந் நகரைச் சார்ந்த வாகையடித்தெரு திரு K. மாரிமுத்துப்பண் டாரம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அருச்சனை திருமுறை ஓதல், பசனை, நன்மொழி வழங்கல் முதலிய நிகழ்ச் சிகள் வழக்கம் போல் நடைபெற்றன. சைவப் புலவர் திரு. E. பகவதிப் பெருமாள் பிள்ளை குருதேவரின்மாண்பைக் குறித்

தும் சிவஞான சித்தியாரின் சிறப்பைக் குறித்தும் தக்க சான்றுகளுடன் நல்லுரை வழங்கினர். B. சிவகுருநாதன் செட்டியார் B.A., B.L., திருநாளைப்போவார் புராணப் பாசுரங்களை இசையுடன் பயின்று அவையை மகிழ்வித்தனர். தீபாராதனையோடு கூட்டம் இனிது நிறைவுற்றது.

தனியூர் கூறைநாடு சிவனடியார் திருக்கூட்ட ஆதிவார வழிபாட்டுப் பத்தாம் ஆண்டு நிறைவு விழா 20—9—64ல் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. சூரியனார் கோயில் மீனாக்ஷிசுந்தர தேசிகர் சுவாமிகள், நாகை திரு. வை. மு. சண்முக தேசிகர் முதலியோர் கலந்து விழாவைச்சிறப்பித்தனர். சிறந்தமாகேச்சுர பூசையும் நிகழ்ந்தது,

அரிமழம் நல்வழிக்கழக மூன்றும் ஆண்டுச் சொற்பொழிவுகளை உயர்திரு முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் 10, 11, 12—10—64 ஆம் நாட்களில் சிறப்புற நடாத்தினார்கள்.

18—10—64 திருவெண்ணெய் நல்லூரில்சுந்தரர்அருள் நெறிமன்றத் தொடக்கவிழா திருவருட்டுறையில் தவத்திரு. குன்றக்குடி அடிகளார் தலைமையில் நிகழ்ந்தது. பல சைவப் பெரியார்கள் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.

புரசைத் திருநெறிக் கழக 44ஆம் திங்கள் வழிபாடு 18—10—64ல் பெரும்பேறு முருகன் கோயிலிலும் மதுராந்தகம் வட திருச்சிற்றம்பலம் திருக்கோயிலிலும் சிறப்புற நிகழ்ந்தது.

இக்கழக 17ஆம் ஆண்டு விழா நம் சமாஜ அன்பர் திரு அ. சங்கரநாராயண முதலியார் அவர்கள் தலைமையில் 8—11—64ல் சிறப்புற நிகழ்ந்தது. வித்துவான் R. சக்கரபாணியார் விரிவுரையாற்றினார்.

குன்றத்தூர் சுப்பிரமணிய சுவாமி தேவத்தானத்திலும் திருப்போரூர் கந்தசாமி தேவத்தானத்திலும் கந்தர் சஷ்டி விழாவும் அதையொட்டி லக்ஷார்ச்சனையும் 5—11—64 முதல் 10—11—64 முடிய சிறப்புற நிகழ்ந்தது.

மதுரையிலும் காஞ்சியிலும் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் அவர்களின் கட்டளைப்படி கந்தபுராணப் பிரசங்கங்கள் 5—11—64 முதல் 10—11—64 முடிய சிறப்புற நிகழ்ந்தன. மதுரையில் திருவயிநாகரம் வே. இராமநாதன் செட்டியார் அவர்களும் காஞ்சியில் வித்துவான் திரு. க. சம்பந்த முதலியார் அவர்களும் விரிவுரையாற்றினர்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1. by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai B.A., L.T., for the Saiva Siddantha MahaSamajam 12, East Mada St., Mylapore, Madras-4.